### நாடெங்கும் பரவும் திராவிட மாடல்!

# கேரளாவிலும் மகளிர் உரிமைத் தொகை!

## முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு!

**திருவனந்தபுரம், நவ. 1- தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் படிப்படியாக நாடெங்கும் பரவி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கேரள மாநிலத்திலும் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விரைவில் அமலுக்கு வரவுள்ளது.**

இதுதொடர்பாக திருவனந்தபுரத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் நிருபர்களிடம் கூறியதாவது:-

கேரளாவில் பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்த அரசு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி சமூக நல ஓய்வூதியம் பெறாத திருநங்கைகள் உள்பட ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

35 வயது முதல் 60 வயது வரை உள்ள மஞ்சள் மற்றும் பிங்க் நிற ரேஷன் கார்டுகள் வைத்திருக்கும் 31.34 லட்சம் பெண்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள். அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மாதம் ரூ.1000 அதிகரிக்கப்படும். முதியோர் ஓய்வூதியம் ரூ. 1600லிருந்து 2000 ஆக உயர்த்தப்படும். ஆஷா தொழிலாளர்களின் ஊதியமும் ரூ. 1000 அதிகரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

ஏற்கனவே தமிழ்நாட்டில் மகளிர்க்கு உரிமைத் தொகையாக மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது கேரளாவிலும் இத்திட்டம் அமலுக்கு வருகிறது. படிப்படியாக பல்வேறு மாநிலங்களிலும் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் வர இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாளையொட்டி, நேற்று முன்தினம் (30.10.2025) தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, நந்தனத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### பீகாரில் ரிமோட் கண்ட்ரோல் ஆட்சி!

# மோடியின் நாடகத்தால் மயங்கி விடாதீர்!

## தேர்தல் பிரச்சாரத்தில் ராகுல்காந்தி ஆவேசம்!

**முசாபர்பூர், நவ. 1- பீகாரில் ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஆட்சி நடத்தும் பிரதமர் மோடி, ஓட்டு வாங்க நடனம் கூட ஆடுவார் என்று ராகுல்காந்தி ஆவேசமாக பேசினார். பீகாரில் நவ.6, 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடக்கிறது. அங்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி முதல்முறையாக பிரச்சாரம் மேற்கொண்டார். முசாபர்பூர், தர்பங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவுடன் இணைந்து கலந்து கொண்ட ராகுல்காந்தி பேசியதாவது:-**

சத் பூஜைக்காக மோடி யமுனையில் நீராடப் போகிறார் என்ற நாடகத்தை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருக்க வேண்டும். நதி மிகவும் அழுக்காக இருப்பதால் சுத்தமான, குழாய் நீரில் ஒரு குட்டை உருவாகியுள்ளது என்பது அம்பலப்படுத்தப்பட்டபோது அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மோடி எல்லா வகையான நாடகங்களையும் நடிக்கத் தயாராக இருக்கிறார். ஒரு தேர்தல் பேரணியில் நீங்கள் அவரிடம் நீங்கள் நடனமாடினால் நாங்கள் உங்களுக்கு வாக்களிப்போம் என்றால் அவர் உடனடியாக பரத நாட்டியம் ஆடுவார்.

பீகாரில் அவர்கள் ரிமோட் கண்ட்ரோல் மூலம் ஆட்சி நடத்துகிறார்கள். இனி அது நடக்காது. தேஜஸ்வி யாதவ் தலைமையில் பீகாரில் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்படும். சாதி மற்றும் மத வேறுபாடுகளைக் கடந்து சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளின் நலன்களும் கவனிக்கப்படுவதை அவரது ஆட்சி உறுதி செய்யும். தற்போதைய முதல்வர் நிதிஷ் குமார் அரசாங்கத்தை நடத்துகிறார் என்ற மாயையை கைவிடுமாறு பீகார் மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது பீகாரை பொருட்படுத்தாத பா.ஜ.க.வின் ரிமோட் கண்ட்ரோல் மூலம் நடத்தப்படும் அரசு. நீங்கள் அணியும் ஆடைகள் பெரும்பாலும் சீனாவில் தயாரிக்கப்பட்ட முத்திரையைக் கொண்டுள்ளன. இவை பீகாரில் தயாரிக்கப்பட்ட ஆடைகளால் மாற்றப்படும் நாளை நான் காண விரும்புகிறேன்.

ஆனால் பெரிய வணிக நிறுவனங்களுக்கு வேலை செய்யும் ஒரு அரசாங்கத்தின் கீழ் இது நடக்காது. பணமதிப்பிழப்பு, குறைபாடுள்ள ஜிஎஸ்டி போன்ற நடவடிக்கைகளால் பாஜ அழித்த சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஊக்கம் தேவை. காங்கிரஸ் வற்புறுத்தலின் பேரிலேயே மோடி அரசு சாதி வாரி கணக்கெடுப்புக்கு ஒப்புக்கொண்டது. தற்போது இரண்டு இந்தியாக்கள் உருவாகி வருகின்றன. ஒன்று சாதாரண மக்களுக்கு சொந்தமானது, மற்றொன்று ஐந்து அல்லது 10 பில்லியனர்களுக்கு சொந்தமானது. பீகார் போன்ற இடங்கள் வறுமையில் வாடுவதற்கு இதுவே காரணம், அதன் பரந்த ஆற்றல் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

மலிவான இண்டர்நெட் சேவை ஏழைகளுக்கும் சமூக ஊடகங்களை அணுகக்கூடியதாக மாற்றியுள்ளது என்று மோடி கூறுகிறார். தொலைத் தொடர்புத் துறையில் ஒரு வணிக நிறுவனத்தின் ஏகபோகத்தை மோடி ஏன் வெளிப்படுத்தவில்லை. மேலும், மக்களுக்கு வேலை கொடுக்க முடியாததால், மக்கள் ரீல்கள் மற்றும் இன்ஸ்டாகிராமிற்கு அடிமையாக வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர்கள் மகாராஷ்டிரா மற்றும் அரியானாவில் வாக்குகளைத் திருடிவிட்டனர்.

பீகாரிலும் அதையே செய்ய முயற்சிப்பார்கள். வாக்குகளைத் திருடுவது பாபாசாகேப் அம்பேத்கரின் அரசியலமைப்பின் மீதான தாக்குதல். அரசியலமைப்பைப் பாதுகாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அரசியல் சிக்கல்களை உங்களால் சில நொடிகளில் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே மோடியின் நாடகத்தால் நீங்கள் மயங்கிவிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ராகுல்காந்தி பேசினார்.

### வேண்டுமென்றே தவறான தகவல்களை கூறுகிறார் எடப்பாடி பழனிசாமி!

# கழக ஆட்சியில் அதிகபட்ச நெல் கொள்முதல் கடந்த ஆட்சியைவிட மூன்று மடங்கு அதிகம்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேட்டி!

*திண்டுக்கல், நவ. 1 - எடப்பாடி பழனிசாமி வேண்டுமென்றே தவறான தகவல்களை கூறுகிறார்*

*கழக ஆட்சியில் அதிகபட்ச நெல் கொள்முதல் கடந்தாண்டை விட மூன்று மடங்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி கூறினார்.*

*உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல்லில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:*

*எடப்பாடி பழனிசாமி நெல் கொள்முதல் தொடர்பாகதவறான தகவல்களை கூறி வருகிறார். அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால ஆட்சியில் ஒரு கோடியே 79 லட்சத்து 81 ஆயிரத்து 152 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதேபோல் குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.27 ஆயிரத்து 972 கோடியே 21 லட்சம் வழங்கப்பட்டது. தமிழக அரசின் ஊக்கத்தொகையாக ரூ.1,145 கோடியே 38 லட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது.*

*ஆனால் கழக அரசின் 54 மாத ஆட்சியில் ஒருகோடியே 96 லட்சத்து 37 ஆயிரத்து 499 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.41 ஆயிரத்து 777 கோடியே 68 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. அதேபோல் தமிழக அரசின் ஊக்கத்தொகை யாக ரூ.2 ஆயிரத்து 2 கோடியே 76 லட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே தி.மு.க. ஆட்சியில் தான் அதிகபட்சமாக நெல் கொள்முதல் செய்து இருக்கிறோம்.*

*ஆண்டை விட இந்த ஆண்டு 3 மடங்கு அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக 13 மாவட்டங்களில் 127 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்திலும் தலா ஆயிரம் மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இது தவிர தேவைப்படும் பகுதியிலும் நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தினமும் 35 ஆயிரம் டன் நெல் லாரிகள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதற்காக 4 ஆயிரம் லாரிகள் இயக்கப்படுகின்றன.*

*தி.மு.க. ஆட்சியில் நெல்லுக்கான ஊக்கத்தொகையை சிறிய ரகத்துக்கு ரூ.70ல் இருந்து ரூ.156 ஆகவும், பொது ரகம் ரு.50ல் இருந்து 131 ஆகவும் உயர்த்தி இருக்கிறோம். அதேபோல் குறைந்தபட்ச । ஆதார விலையாக குவிண்டாலுக்கு சிறிய ரகத்துக்கு ரூ.2,545ம், பொது ரகத்துக்கு ரூ.2,500ம் தருகிறோம். மேலும் நெல் கொள்முதல் ஈரப்பதம் அளவு 17 சதவீதமாக உள்ளது. அதை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்பேரில் அதிகாரிகள் குழுவினர் நேரில் வந்து ஆய்வு செய்து விட்டு சென்று உள்ளனர்.*

**மத்திய மந்திரி வருகை**

*மேலும் செறிவூட்டப்பட்ட அரிசி தொடர்பாக மத்திய அரசு ஆகஸ்டு 18 ந்தேதியே அனுமதி வழங்கியதாக எடப் பாடி பழனிசாமி கூறுகிறார். இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. எனவே மத்திய மந்திரி பிரகலாத்ஜோஷியிடம் இன்று (நேற்று) நெல் கொள்முதல் ஈரப்பதத்தை உயர்த்தக் கோரியும், செறிவூட்டப்பட்ட அரிசியை சோதனை செய்து தரச்சான்று விரைவாக வழங்கக்கோரியும் வலியுறுத்தி இருக்கிறேன்.*

*அதோடு எடப்பாடி பழனிசாமி தஞ்சை சென்றபோது ஒரு பெண்மணி தனது நெல்மணிகள் முளைத்துவிட்டதாக கூறினார். அந்த பெண்மணி நடவுசெய்த நெற்பயிர் இதுவரை அறுவடை செய்யவில்லை என்பது தெரியவந்தது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

### என்.கௌதமன் தலைமை! நாகையில்

# என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி செயல் திட்டம் ஆலோசனைக் கூட்டம்!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை! ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், ஜெயபிரகாஷ் பங்கேற்பு!

*நாகை, நவ. 1 - .நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி செயல் திட்டம் தொடர்பான ஆலோசனை கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் நாகை தொகுதி ஆர்.அருள்செல்வம், கீழ்வேளூர் தொகுதி இரா.சங்கர், வேதாரண்யம் தொகுதி ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் தலைமை தாங்கி கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.*

*கூட்டத்தில் நாகை மாவட்ட தேர்தல் பொறுப்பாளரும், கழக சட்டத்திருத்தக் குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., சிறப்புரையாற்றினார்.*

*கூட்டத்தில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தை கூட்டிட வேண்டும் இந்தற்கான ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்வதோடு கூட்டங்களில் கழக நிர்வாகிகள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள செய்திட வேண்டும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எஸ்.ஐ.ஆர் எனப்படும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.*

*இது குறித்து நமது பணிகள் மற்றும் கடமைகள் குறித்து அனைத்து வாக்குச்சாவடிகளிலும் விழிப்புணர்வுடன் கழக நிர்வாகிகள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மற்றும் கழகதினர் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது,*

*கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல. மேகநாதன், க.மறைலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், என். சதாசிவம், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார் பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பரமணியன், முகமது சுல்தான், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரி பாலன், துணை ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.செல்வா, ரெக்ஸ், பரமேஷ்வரி, காந்திமதி, தொகுதி ஒருங்கிணைப்பாளர் பால.ஆத்மநாதன், அந்தோனிடேவிட், செல்லமுருகன், மாவட்ட வழக்கறிஞர் அணி சிங்காரவேல், கே.செந்தில், பாஸ்கர், சபாரெத்தினம், சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட கழக சார்பில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி" ஆலோசனைக் கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகராட்சி மேயர் அன்பழகன்,சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பில் பெரியசாமி பரணி குமார், அவைத் தலைவர்கள் அம்பிகாபதி, பேரூர் தர்மலிங்கம், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த், பொருளாளர் துரைராஜ் தொகுதி பொறுப்பாளர்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.